Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

Spl.S.C.No.62/2025

Dated 05-03-2026
Deposition of witness for : PW 6 (LW 6)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தியாகராஜன் | வயது | : | 63 |
| தந்தை பெயர் | : | ஆறுமுகம் | தாலுக்கா | : | பாபநாசம் |
| கிராமம் | : | புள்ளியம்பாடி | தொழில் | : | விவசாயம் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused 1,2 present**

Ld.D.**Counsel Present**

**As per the Circular of the Hon’ble High Court, Madras in ROC No. 74663/2024 /F1/dt.21.2.2025 the Identity of the witness verified with their Identity card.**

**Aathar card of the Witness verified.**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது திருமண்டங்குடி புளியம்பாடியில் குடும்பத்துடன் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு ஒரு ஏக்கர் நிலம் திருமண்டங்குடியில் விவசாய நிலம் உள்ளது.

2) நான் 2013 ம் வருடம் கூனஞ்சேரி வேளாண்மை விரிவாக்க மைய டெப்போவில் பணம் கொடுத்து விதை வாங்கினேன். அது மானிய விலையில் வாங்கியதா என்பது எனக்கு ஞாபகம் இல்லை.

3) என்னிடம் காட்டப்படும் உளுந்து மானிய விண்ணப்பத்தின் பில் எண்.938857 ல் உள்ள பாபநாசம் வட்டார வேளாண்மை சலுகை விலை பெறும் விண்ணப்பம் Vol.4 பக்கம் 77 ல் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மற்றும் டெப்போ மானிய பதிவேட்டு பக்கம் 62 ல் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

4) இது பற்றி என்னை லஞ்ச ஒழிப்பு போலிசார் விசாரித்தார்கள்.

அரசு தரப்பில் சாட்சியை குறிப்பிட்ட சங்கதிகள் பொறுத்து பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

1) என்னை போலிசார் விசாரித்தார்கள் என்றும் அப்போது உளுந்து மானிய விண்ணப்பத்தின் பில் எண்.938857 ல் உள்ள பாபநாசம் வட்டார வேளாண்மை சலுகை விலை பெறும் விண்ணப்பம் Vol.4 பக்கம் 77 ல் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என்றும் அதுபோல் டெப்போ மானிய பதிவேட்டு பக்கம் 62 ல் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என்றும் சொல்லி விட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை என எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது.

VELMURUGAN P

Digitally signed by VELMURUGAN P
Date: 2026.03.05 16:28:30 +0530